**IN THE COURT OF SUBORDINATE JUDGE'S COURT, ARAKKONAM**

**OS. 1/2018**

**Deposition of Witness : PW2 / RW DW.1**

| | | |
|---|---|---|
| Name | : | Chokkalingam |
| Father/Husband's Name | : | Ekambaram |
| Village | : | Kaveripakkam |
| Taluk | : | Nemili |
| Work | : | - |
| Religion | : | - |
| Age | : | 73 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.01.2020.

**மு.வி.** வாதியை தெரியும். வாதி என்னுடைய தம்பி. தாவா சொத்தை 40 வருடத்திற்கு முன்பு வா.சா.ஆ.1 காலிமனையாகவும் தட்டோடு வீட்டுடன் மூலம் கிரயம் பெற்றேன். எனக்காகவும் எங்கள் குடும்பத்திற்காகவும் கூட்டாகத்தான் கிரயம் வாங்கினோம். என்னுடைய சகோதரர்கள் பெயர் ஆறுமுகம் சண்முகம் ராஜகோபால் கணேசன் மற்றும் வாதி. வாய்மூலமாக எங்கள் குடும்ப சொத்து பிரித்துக் கொண்டோம். அதில் நான் வா.சா.1 மூலம் வாங்கியிருந்த சொத்து வாதிக்கு ஒதுக்கப்பட்டது. அதன் பிறகு அவர் தான் அனுபவித்து வந்தார். அதில் ஏற்கனவே இருந்த தட்டோடு வீடு பழுதடைந்து விட்டதால் அதை இடித்து வாதி தளம் போட்ட வீடு கட்டினார். இன்றுவரை வாதி தான் வசித்து வருகிறார். தாவா சொத்து நான் வாங்கும்போது வருவாய் சொத்து பட்டா நிலம். தற்போது அதை நத்தம் புறம்போக்காக மாற்ற அரசு அறிவிப்பு என் சகோதரர் வாதிக்கு அனுப்பியுள்ளது. பட்டா இடம் என்பதால் நான் கிரயம் வாய்மொழி பாகப்பிரிவின் மூலம் என் தம்பி பாகத்திற்கு வந்தது.